**Topic - 'CSR - Handing Over Deeds'**
**Publication - Sunday Virakesari (Advertorial)**
**Date: 12 September 2010**
**Page - 6**

# The Fairmount - சூழல் பாதுகாப்புடன் கூடிய சமூகப் பொறுப்பு வாய்ந்த ஆடம்பர மாடிவீட்டுத்திட்டம்

நகர்ப்புறத்தில், ஒரு காலத்தில் ஒதுக்கப்பட்ட கிராமமாக இருந்த ராஜகிரிய, உண்மையில் ஆச்சரியப்படத்தக்க வகையில் மாற்றமடைந்துள்ளது.

31 மாடிகளைக் கொண்ட கண்கவர் கட்டடம் உஷ்ணவலய பசுமைப் பிரதேசத்தின் நடுவில் அமைந்து, வீதியால் செல்வோரின் கவனத்தை இலகுவில் பெறுவது The Fairmount - Urban Oasis ஆகும்.

112 மூன்று ஆடம்பர படுக்கை அறைகளைக் கொண்ட சொகுசு மாடி வீடுகளை உள்ளடக்கிய இதன் நிர்மாண வேலைகள், சூழல் பாதுகாப்புடன்கூடிய சமூகப் பொறுப்பு வாய்ந்த வகையில் சமீபத்தில் பூர்த்தி செய்யப்பட்டன.

Fairway Condominiums நிறுவனத்தின் பணிப்பாளர் நெலுக டி அல்விஸ் கருத்து வெளியிடுகையில்,

The Fairmount ஐச் சுற்றியுள்ள இடத்தின் இயற்கை புவியியல் தன்மை பாதுகாக்கப்பட்டுள்ளமை எமது திட்டத்தின் முக்கிய அம்சமாகும் என்று கூறினார். அயலில் வாழும் சமூகத்தினரின் வாழ்க்கை நிலைமையை மேம்படச் செய்வதற்கும், அங்குள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கும் மனப்பூர்வமான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன என்று கூறினார்.

The Fairmount உள்ள இடம், அபிவிருத்தி செய்யப்பட்ட இடமல்ல. இந்தக் கட்டடம் அமைந்துள்ள நிலத்தில் ஏற்கனவே இரண்டு தோல் தொழிற்சாலைகள் செயற்பட்டன. அங்கு வசிப்பவர்களும் தனியார் காணியில் சட்டவிரோதமாக பிரவேசித்தவர்களாவர். தோல் தொழிற்சாலையின் கழிவுப்பொருட்கள், சுற்றியுள்ள ஈரலிப்பான பிரதேசத்தை சென்றடைவதனாலும், தோல் தொழிற்சாலையினாலும் அந்தப் பகுதி முழுவதிலும் துர்நாற்றம் நிறைந்திருந்தது.

இன்று நிலைமை முற்றிலும் மாறியுள்ளது. The Fairmount க்குச் செல்லும் வீதிகள் முன்னரிலும் பார்க்க அடையாளம் தெரியாதபடி முற்றிலும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

சிலவருடங்களுக்கு முன்னர் மிக மோசமான நிலையிலிருந்த ஒடுங்கிய வீதி தற்சமயம் அகலமாக உயர்த்தப்பட்டுள்ள காப்பட் இடப்பட்ட வீதியாக அமைந்து The Fairmount இல் வசிப்பவர்களுக்கு மாத்திரமல்லாமல், அருகிலுள்ள கிராம மக்களுக்கும் நன்மைதரும் வகையில் அமைந்துள்ளது.

கால்வாய்களும், நீரோடைகளும் சுத்திகரிக்கப்பட்டு சகலவித கழிவுப்பொருட்களும் அகற்றப்பட்டுள்ளன. வீதிக்கு அருகிலும் The Fairmount ஐ சுற்றியும் அழகான சிற்றாறு ஓடுகிறது.

மிகவும் சுத்தமாக உள்ள இந்த சிற்றாற்றின் கரைகள் The Fairmount இனால் சுயமாகவே பராமரிக்கப்படுகின்றன.

சட்டவிரோத குடியிருப்புக்கள் எதுவும் இப்போது அங்கு இல்லை. The Fairmount இன் உதவியைப் பெற்று அவர்கள் வேறு இடங்களுக்குச் சென்றுள்ளனர். உண்மையில் 8 வறிய குடும்பங்கள் The Fairmount இனால் கட்டப்பட்ட வீடுகளை அன்பளிப்பாக பெற்றுள்ளன.

இந்த மூன்று படுக்கை அறைகளைக் கொண்ட வீடுகள் 6 பேர்ச் காணியில் கட்டப்பட்டுள்ளன. இதில்குடியிருப்பவர்கள் நிரந்தரமான வீடுகளைப் பெற்றுள்ளதனால் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

வீடுகளுக்கான காணி உறுதிகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு சமீபத்தில் கையளிக்கப்பட்டன.

நிலுக டி அல்விஸிடமிருந்து காணி உறுதியைப் பெற்ற சந்தன மாரியம்மா கருத்து வெளியிடுகையில்,

'நாங்கள் அதிஷ்டசாலிகள் என நம்புகின்றோம். எமக்குச் சொந்தமாக ஒரு வீடு இருப்பது உண்மையில் பெரிய விடயமாகும்' என்று கூறினார். தற்சமயம் நாம் கௌரவத்துடன் வாழ்கின்றோம் என்று அவரது மகள் சுலோச்சனா தெரிவித்தார்,

வீட்டு வசதியற்ற அயலவர்களுக்கு இந்த வீடுகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது மாத்திரமல்லாமல், அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் The Fairmount இன் அன்பளிப்பாக அவர்களது முச்சக்கர வண்டிகளின் உரிமையாளர்களாக வரும் அதிஷ்டத்தையும் பெற்றுள்ளனர்.

உள்ளுர் இளைஞர்கள் சுயதொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுவதற்கு உதவும் வகையிலான நிறுவனத்தின் CSR திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. கிராமத்தைச் சேர்நதவரும், தற்சமயம் இந்த மாடிவீட்டுத் திட்டத்தில் கடமையாற்றுவோருமான கயான் சம்பத் என்ற இளைஞர் கருத்து வெளியிடுகையில்,

'முச்சக்கர வண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது மாத்திரமல்லாமல், கிராமத்து இளைஞர்கள் பலருக்கு சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதிலும் நிறுவனம் உதவியுள்ளது' என்றும் பலதரப்பட்ட பயிற்சி நெறிகளில் (காற்று சீராக்கம், அலுமினியம் தொழில் என்பனவற்றில்) அவர்கள் சேர்ந்து கொள்வதற்கு உதவியுள்ளது என்றும் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சி காரணமாக அவர்கள் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர்.

மாடி வீடுகள் கட்டப்பட்ட தருணத்தில் ஏற்பட்ட வேலைகளில் கிராம மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. கட்டட நிர்மாணம் பூர்த்தியடைந்த பின்னரும் கூட சில இளைஞர்கள் இங்கு வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

உதாரணமாக, The Fairmount இலுள்ள தேகப்பயிற்சிக் கூடத்திற்கும் நீச்சல் தடாகத்திற்கும் சுதத் பொறுப்பாக உள்ளார்.

The Fairmount ஐ அபிவிருத்தி செய்த நிறுவனம், கிராமத்தின் வரலாற்று முக்கியத்துவம் தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் என்பதை நிச்சயிப்பதில் அர்ப்பணித்துள்ளது.

கொத்துவேகொட என்ற இந்தக் கிராமம் 15ஆம் 16ஆம் நூற்றாண்டுகளில் கோட்டே ராஜதானியின் மன்னர்கள் வாழ்ந்த நகரமாக இருந்தது.

இந்த அற்புதமான ஆடம்பர மாடிவீட்டு கட்டடத் தொகுதியை உருவாக்குவதில், சுற்றாடலின் அமைப்பிற்கும், சூழலின் இயற்கை வனப்பிற்கும் அதேசமயத்தில், அபிவிருத்திக்கும் நவீனமயப்படுத்துவதற்கும் இடையிலான சமநிலையை ஏற்படுத்துவதில் The Fairmount அபிவிருத்தியாளர் வெற்றி கண்டுள்ளார்.